# இயேசு கூறிய வழியில் பேதுருவும் பிறரும் சீஷர்களை உருவாக்கினர்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் D3b பாடத்தை வாசிக்கவும்

**ஜெபம்:** "பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே, நானும், என்னால் வழிநடத்தப்படுகிறவர்களும். எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் உண்மையான சீஷர்கள் ஆகும்படி உதவி புரிக. அவருக்குக் கீழ்ப்படியவும், மனிதன் எழுதும் எல்லா சட்டங்களுக்கும் மேலாக அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியும் சீஷர்களை உருவாக்கவும் எங்களுக்கு உதவி புரியும். அவருடைய நாமத்தினால் கேட்கிறோம். ஆமென்."

## 1. புதிய விசுவாசிகளை தைரியமான சீஷர்களாக பேதுருவும் பிறரும் எவ்வாறு உருவாக்கினர் என்பதை அறிந்து கொள்க.

- பெந்தெகொஸ்தே நாளில், ரோம சாம்ராஜ்யம் எங்கும் இருந்து எருசலேமுக்கு வந்த எல்லா யூதர்களும் பேதுருவின் பேச்சைக் கேட்டனர். பலர் எதிர்த்தனர், ஆனால் பேதுரு அவர்களிடம் கூறினார்: "இஸ்ரவேலரே அதிசயங்களினால் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்திய மனிதரே நசரேயனாகிய இயேசு. அக்கிரமக்காரரைக் கொண்டு நீங்கள் அவரை சிலுவையில் ஆணி அடித்துக் கொலை செய்தீர்கள். ஆனால் தேவன் அவரை மரித்தோரில் இருந்து எழுப்பினார். நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவும் ஆக்கினார்." அப். 2:22-36.




- அந்த நாளில் மனம் திரும்பிய யூதர்களுக்கு ஞானஸ்நானம் அளிக்கப்பட்டு ஆதி திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர், அப். 2:38-41.

- அப்போஸ்தலர் 2 வது அதிகாரம் முடிவதற்கு முன்னர் ஆயிரக்கணக்கான அந்த புதிய விசுவாசிகள் எல்லா இயேசுவின் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய ஆரம்பிப்பதே ஆச்சரியகரமான விஷயம். இது அவ்வளவு சீக்கிரமாக எவ்வாறு நிகழ்ந்தது. பேதுருவும் அவரது கூட்டாளிகளும் என்ன செய்தார்கள் என்பதை ஆராய்ந்தால் நாமும் அதையே செய்ய முடியும்.

- பெந்தெகொஸ்தேவுக்கு ஏழு வாரத்திற்கு முன், இயேசு மரித்தோரில் இருந்து எழுந்து, நாற்பது நாள் அளவு பல முறை தமது அப்போஸ்தலர்களுக்குக் காணப்பட்டு, அவர்களுக்கு தமது கடைசி அறிவுரைகளை வழங்கினார். பெந்தெகொஸ்தேவுக்கு பத்து நாட்களுக்கு முன், இயேசுவின் அப்போஸ்தலர்கள் அவர் பரத்துக்கு எழுந்தருளினதைக் கண்டனர்.

- இயேசு பல விஷயங்களைக் கட்டளை இட்டார். நாம் இவற்றை ஏழு "அடிப்படை" கற்பனைகளாகத் தொகுக்க முடியும். அப்போஸ்தலர் 2 ல் இந்த அடிப்படைகளையே 3000 புதிய விசுவாசிகள் உடனடியாகக் கீழ்ப்படிந்தனர். பெயர் சுட்டப்படாத ஒரே கட்டளை அன்பு. அதை அவர்கள் தங்கள் அந்நியோந்யத்தாலும், பகிர்தலாலும் வெளிப்படுத்தினர்.

- பேதுருவைப் போலவே, சிறந்த முறையில் சீஷர்களை உருவாக்குவோர், இயேசுவின் அனைத்து கற்பனைகளுக்கும் கீழ்ப்படிவதை போதிக்கின்றனர். ஒரு உடையாத சங்கிலியைப் போல, முழுமையான கீழ்ப்படிதல் ஒரு மந்தையை வலிமை உள்ளது ஆக்குகிறது.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள ஏழு கற்பனை களையும் நோக்குங்கள். இன்னும் உங்கள் மந்தை சிறந்த முறையில் கீழ்ப்படிய வேண்டியவற்றை அடையாளப்படுத்துங்கள்.




1 **மனந்திரும்பு, விசுவாசி, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள் மனமாறுதல், புத்துருவாக்கம்,** மாற்கு 1:15; யோவான் 3:16; 20:22

2 **ஞானஸ்நானப்படு:** புதிய மறுரூபமாக்கப்பட்ட வாழ்க்கைக்கு ஞானஸ்நானம் ஆரம்பமாக இருக்கட்டும், அப்.2:38; மத்.28:18-20

3 **அன்புகூர்:** தேவனையும், அயலாரையும், விசுவாசிகளையும், ஏழைகளையும், விரோதிகளையும் (மன்னித்து) நேசி. மத்.22:36-40; யோவான் 13:34-35, லூக் 10:25-37; மத்.5:43-48

4 **அப்பம் பிட்டுபகிர்ந்தளி:** ஐக்கியவிருந்து (கர்த்தரின் பந்தி), ஆராதனையோடு சம்பந்தப்பட்ட யாவும், மத்26:26-28; யோவான் 4:24

5 **ஜெபி:** இயேசுவின் நாமத்தினால் தனியாகவும், குடும்பமாகவும் ஜெபி. மன்றாடு. ஆவிக்குரிய போராட்டத்தை நடத்து, யோவான் 16:24

6 **கொடு:** நமது உலகப்பொருள், நேரம், தாலந்து இவைகளை பராமரித்தல், லூக்.6:38, மத்.6:1-4.

7 **சீஷர்களை உருவாக்கு,** இயேசுவுக்கு சாட்சியாக இரு, அவரது மந்தையை மேய், வார்த்தையைக் கைக்கொள், தலைவர்களைப் பயிற்றுவி, ஊழியர்களை அனுப்பு, மத்.28:18-20.

இயேசுவின் மாபெரும் ஆணையை மத்.28:18-20 லிருந்து **மனப்பாடம்** செய்க. மேலும் அங்கே காணவேண்டியவை.

- சீஷர்களை உருவாக்கும்படி இயேசு எந்த அதிகாரத்தால் தம்மைப் பின்பற்றுபவர்களுக்குக் கட்டளை இடுகிறார்?
- எழுந்து, வெற்றி வாகை சூடிய கிறிஸ்து, எந்த ஒர் அரசனோ, ஆட்சித்தலைவரோ, இராணுவ அதிகாரியோ கொண்ட அதிகாரத்தை விட மேலான அதிகாரத்தோடு, வானத்திலும் பூமியிலும் உள்ள எல்லா அதிகாரத்தோடும், நமக்குக் கட்டளை இடுகிறார். சீஷர்களாக்கும்படி யாரிடம் நம்மைப் போகச் சொல்லி கட்டளை இடுகிறார்?
- ஞானஸ்நானம் தவிர, எல்லா மக்களையும் எவ்விதம் சீஷராக்கும் படி அவர் கூறினார்?
- அவருடைய எல்லா கற்பனைகளுக்கும் கீழ்ப்படிய கூறும் மாபெரும் பணியை எளிதாக்கும் வண்ணம் இயேசு அளிக்கும் தேற்றும் வாக்குத்தத்தம் என்ன?
- பெந்தெகொஸ்தே நாளில் தேவன் தமது வல்லமையுள்ள வேலையை ஆரம்பித்தபோது இயேசுவின் சீஷர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதை அப். 1:14 ல் காண்க.

- பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட யூதர்கள் மனமாறும்படி செய்த பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களை என்ன செய்யும்படி பலப்படுத்தினார் என்பதை அப். 2:1-24 ல் காண்க.

**2. வரும் வாரத்தில் செய்ய வேண்டிய விஷயங்களை உடன் ஊழியர்களுடன் இணைந்து திட்டமிடவும்**

- மக்கள் இயேசுவின் அடிப்படை கற்கனைகளை ஞாபகம் வைத்துக் கொள்ள உதவியாக, கவிதையார்வம் கொண்ட ஒருவரை அதைப்பற்றி ஒரு பாடல் எழுதும்படி வேண்டிக் கொள்ளுங்கள்.
- இதுவரை இயேசுவின் எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படியாத விசுவாசிகளை சந்தித்து அறிவுரை கூறவும்
- இந்த அடிப்படையான கட்டளைகளின் மேலேயே நாம் அனைத்து ஊழியங்களையும் கட்டுகிறோம் என்று விளக்கம் அளிக்கவும்.
- அன்போடு இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவில்லை என்றால், இரவும் பகலும் துதித்தாலும், தேவன் அந்தத் துதிகளை ஏற்க மாட்டார் என்பதை விசுவாசிகளுக்கு விளக்கவும், மத். 14:1-8.

**3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் இணைந்து ஜெபிக்கவும்**

சூழ்நிலைக்கும், அந்தந்தப் பிரதேச சம்பிரதாயங்களுக்கும் பொருத்தமான **செயல்பாடுகளை** தெரிவு செய்து அவற்றை எந்த ஒரு ஒழுங்குமுறையிலும் வழங்கலாம்.

- ஆதி திருச்சபையின் கதையையும், பேதுருவும் சீஷர்களை உருவாக்கிய மற்றவர்களும், ஆரம்பத்தில் இருந்தே இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுமாறு, அநேகம் புதிய விசுவாசிகளுக்கு எவ்வாறு போதித்தனர் என்றும் கூறவும்.
- இயேசுவின் இறுதி போதனையின் (மத். 28:18-20) முக்கியத்துவத்தை விளக்குக.
- இயேசுவின் ஏழு அடிப்படைக் கற்பனைகளை மனப்பாடம் செய்ய விசுவாசிகளுக்கு உதவவும் (மேலே தரப்பட்டுள்ளது).
- நமது அனைத்து போதனைக்கும் ஊழியத்துக்கும் இதுவே அடிப்படை என்பதை விளக்கவும்.
- கற்பாறையின் மேல் தன் வீட்டைக் கட்டிய புத்தியுள்ள மனிதனைப் பற்றிய உவமையை நாடகமாக்குமாறு குழந்தைகளைக் கேட்கவும்.
- அந்தப் புத்தியுள்ள மனிதன் இயேசுவின் கற்பனைகளைக் கேட்கவும் கீழ்ப்படியவும் செய்தான் என்பதை விளக்கவும்.
- பிள்ளைகள் தாங்கள் தயாரித்த கேள்விகளை பெரியவர்களிடம் கேட்கவும்.

இயேசு கூறியபடி சீஷர்களை உருவாக்க உதவும்படி **பரிசுத்த ஆவியானவரைக் கேளுங்கள்.**

அப். 2:46 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தியை** ஆசரிக்கவும். அது இயேசுவின் ஓர் அடிப்படையான கற்பனை என்பதை விளக்கவும். ஆதி விசுவாசிகள் தங்கள் வீடுகளில் அப்பம் பிட்டு இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தனர்.

சமீபத்தில், இயேசுவின் கற்பனைகளுக்கு கீழ்ப்படியுமாறு விசுவாசிகளுக்கு போதித்த ஊழியக்காரர்களிடம் இருந்து **அறிக்கையைக் கேளுங்கள்.**

இந்த வாரத்தில் செய்யத் **திட்டமிட்டுள்ள** நடவடிக்கைகளை அறிவித்து அதற்கான ஏற்பாடுகளை செய்யவும்.

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுவாகக்** கூடி, ஜெபித்து, திட்டங்களை உறுதிப்படுத்தி, ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்துங்கள்.

யோவான் 14:15 ஐ **மனனம் செய்க:** "நீங்கள் என்னிடத்தில் அன்பாய் இருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்."